தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2042—கார்த்திகை 29

2011 டிசம்பர் 15, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 11–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாஉள முன்நிற் பவை."

இயற்கையான அறிவுக் கூர்மையும், உயர்வான நூலறிவும், கூர்மையும் ஒருசேரப் பெற்றவர்களுக்கு தீர்த்து வைக்க முடியாத மிக நுட்பமான சூழ்ச்சிகள் என்று எதுவும் இல்லை.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான டாக்டர் ஏ. மணி அவர்கள் 23–7–2011 அன்றும், திரு. ஏ.ஆர். மாரிமுத்து அவர்கள் 4–10–2011 அன்றும், திருமதி எஸ். ஹேமலதா தேவி அவர்கள் 21–10–2011 அன்றும், திரு. க. சுப்பு அவர்கள் 29–10–2011 அன்றும், திரு. என். சிவஞானம் அவர்கள் 30–10–2011 அன்றும், திரு. மு.க. பெரியசாமி அவர்கள் 17–11–2011 அன்றும், திரு. கி. இராஜன்பாபு (என்கிற) தணிகை பாபு அவர்கள் 21–11–2011 அன்றும், திரு. வி.பி. சிங்காரவேலு அவர்கள் 7–12–2011 அன்றும் மற்றும் திரு. கொ. இராமசாமி அவர்கள் 8–12–2011 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[பேரவைத் தலைவர்] [2011 டிசம்பர் 15

டாக்டர் ஏ. மணி அவர்கள் 1996 முதல் 2001 வரை உளுந்தூர்பேட்டை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றினார்.

திரு. ஏ.ஆர். மாரிமுத்து அவர்கள் 1957 முதல் 1962 வரை அதிராம்பட்டினம் தொகுதியிலிருந்தும், 1967 முதல் 1971 வரையிலும், 1971 முதல் 1976 வரையிலும் மற்றும் 1977 முதல் 1980 வரையிலும் பட்டுக்கோட்டை தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்பட பணியாற்றினார்.

திருமதி எஸ். ஹேமலதா தேவி அவர்கள் 1957 முதல் 1962 வரை பெண்ணாகரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்.

திரு. க. சுப்பு அவர்கள் 1971 முதல் 1976 வரை இராஜபாளையம் தொகுதியிலிருந்தும், 1977 முதல் 1980 வரை வில்லிவாக்கம் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்.

திரு. என். சிவஞானம் அவர்கள் 1980 முதல் 1984 வரையிலும் மற்றும் 1985 முதல் 1988 வரையிலும் திருவோணம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்.

திரு. மு.க. பெரியசாமி அவர்கள் 2006 முதல் 2011 வரை பூம்புகார் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றினார்.

திரு. கி. இராஜன்பாபு (என்கிற) தணிகை பாபு அவர்கள் 1991 முதல் 1996 வரை திருத்தணி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்.

திரு. வி.பி. சிங்காரவேலு அவர்கள் 1996 முதல் 2001 வரை வால்பாறை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்.

2011 டிசம்பர் 15] [பேரவைத் தலைவர்]

திரு. கொ. இராமசாமி அவர்கள் 1977 முதல் 1980 வரை சிவகாசி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பான முறையில் பணியாற்றினார்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானம்

மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, அமைச்சர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, அமைச்சர் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம்.

"திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோயில் சட்டமன்றத் தொகுதியிலிருந்து 1996 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நான்கு முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற மக்கள் பணியாற்றியவரும், அனைத்துத் தரப்பு மக்களின் ஆதரவினையும், பாராட்டினையும், நன்மதிப்பையும் பெற்றவரும், ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராக சீரிய முறையில் பணியாற்றியவரும், ஆதி திராவிடர் நலத் துறை, கால்நடைத் துறை, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை ஆகியவற்றின் அமைச்சராகத் திறம்பட பணியாற்றியவரும், தான் சார்ந்த அரசியல் இயக்கத்தில் சாதாரணத் தொண்டனாக இணைந்து பல்வேறு பொறுப்புகளைத் திறம்பட வகித்தவரும், தான் சார்ந்த அரசியல் கட்சியின் மீதும், கட்சித் தலைமையின் மீதும் அன்பும், ஆழ்ந்த நம்பிக்கையும், அளப்பரிய விசுவாசமும், மாறாப் பற்றும் கொண்டவரும்,